**உடுநுவர பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடுநுவர பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடுநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iV) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பன நிலுவை இல்லாதிருந்த போதும் அத்திகெதியில் ஐந்தாகையில் தவறுதலாக பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 1,722,491 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப் பண பட்டியலிடல் ரூபா 1,186,414 ஆக இருந்த போதும் அது ரூபா 2,908,905 என ரூபா 1,722,491 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | எதிர் வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணங்கள் ரூபா 138,965 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | வேறுபாட்டை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 18 கணக்கு மீதிகள் மற்றும் 03 பொறுப்பு கணக்குகளின் வீதிகள் அதற்குரிய அட்டவணைகளின் மீதி களுடன் ஒப்பிடும் போது ரூபா .26,841,846 ஆன இலக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | ஊழியர் கடன் மீதியின் வேறுபாட்டை இனங் காண முடியாது எனவும் முத்திரை மீதியின் வேறுபாடு வந்துதுள்ள வகையை இனங்கான முடியாது எனவும் ஏனைய மீதிகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகும். | கணக்கு மீதிகள் அதற்குரிய அட்டவணைகள் உடன் ஒப்பிட்டு சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் - மேற்படி. |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 46,225 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதிக்குரிய காரணங்கள் இனங் கானப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | தொங்கல் கணக்கு மீதி சீராக்கம் செய்யப்பட. |

## 1.7 <u>இணக்கமின்மைகள்</u>

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**<br>நி.பி 571(3) | 2018 முதல் இருந்து வரும் காலாவதியான ரூபா 1,086,289 ஆன 179 வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைப்புகளை மீளச் செலுத்த அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற நிறுவனங்கள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 434 | வீதவரி அறவீட்டிற்காக சபை அதிகார பிரதேசத்தில் அனைத்து அசையாத ஆதனங்களும் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பீடு | வீதவரி ஆதனங்கள் வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட தரவு பதிவேடு மென் பிரதி மற்றும். | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வீதவரி அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை. | செய்யப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் சபை வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | அச்சுப்பிரதி ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,396,300 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 18,591,301 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 12,923,000 | 15,265,634 | 14,828,857 | 37,913,635 | 12,925,000 | 11,880,628 | 13,118,345 | 37,476,858 |
| (ii) | வாடகை | 5,146,573 | 6,622,999 | 12,077,302 | 7,166,142 | 5,417,073 | 6,868,774 | 12,626,544 | 12,620,445 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,909,100 | 3,150,280 | 2,481,820 | 1,707,810 | 2,909,100 | 3,564,412 | 3,564,412 | 1,039,350 |
| (iv) | ஏனைய வருமானம் | 58,574,400 | 35,431,751 | 138,394,880 | 17,529,183 | 54,961,100 | 43,051,101 | 83,098,985 | 120,492,312 |
| | மொத்தம் | 79,553,073 | 60,470,664 | 167,782,859 | 64,316,770 | 76,212,273 | 65,364,915 | 112,408,286 | 171,628,965 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| **(i) வீதவரி** | | |
| • மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 8,572 தனியார் வீதவரி அலகுகளின் நிலுவை ரூபா 36,521,918 ஆக இருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் 158 ஆம் பிரிவின் நடவடிக்கை எடுத்து நிலுவை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| • மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 176 அரசு ஆதனங் களிலிருந்து ரூபா 1,185,059 தொகையான வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் கொடுப்பனவு செய்யுமாறு ஆலோசணை வழங்கியுள்ளதாக. | - மேற்படி - |
| **(ii) ஏக்கர் வரி** | | |
| 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 202,706 ஆன ஏக்கர் வரி நிலுவை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | முறையான கணிப்பீடு ஒன்றின் பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண கட்டணங்கள் ரூபா 1,722,491 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 8,455,862 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | .நீதிமன்ற தண்டபண நிலுவையொன்று காணப்பட்டதுடன் முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் என்பன பெற்றுக் கொள் ப் வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| **(i) முச்சக்கர வண்டிக் கட்டணங்கள்** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டுக் கணக்கில் மீதி ரூபா 2,458,500 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 10,000 இனை மிகைத்து நிலுவை காணப்படுகின்ற 17 முச்சகர வண்டிச் சங்கங்களிலிருந்து ரூபா 841,200 தொகை அறவிடப்பட வேண்டிய மீதியாக இருந்தது. | எதிர் வரும் காலங்களில் கணிப்பீடு செய்து நிலுவையை அறவிடுவதற்கு அல்லது பட்டியலில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

(ii) **கழிவுப்பொருள் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 920,060 ஆன நிலுவையில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 09 அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா .771,450 ஆக இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |

(**iii**) **அறிவித்தல் பதாதை கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அறிவித்தல் பதாதைகள் ரூபா 1,707,810 ஆன நிலுவையில் காணப்பட்டது. அதில் நிலுவை ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 19 நிறவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 771, 300 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு அல்லது கண்காட்சி பதாதைகளை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் ரூபா 1,028,451 பெற வேண்டிய வீத வரி மோசடிக்குரிய தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நினைவூட்டல் கடிதங்களை வழங்கி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | குறித்த தரப்பினரிடமிருந்து நட்டம் அறவிடப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,710,039 ஆன 05 நிர்மாண கடன்பட்டோர் மீதிகள் 01 ஆண்டிற்கும் 05 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு உரிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக. | பெற வேண்டிய கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஜுலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 08 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளை / IV ஆம் பகுதியின் 83.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்ட 799 கட்டிட | ஒரு விண்ணப்பதாரிக்கு 05 ஆண்டு காலமொன்று காலநீடிப்பு வழங்கப்பட்ட தாகவும் ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | குடியிருப்பிற்காக பயன்படுத்தப் பட்டுள்ள கட்டிடங் களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | | |
| (இ) | 2020 செப்தம்பர் 28 ஆந் திகதிய 2020/06 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் மிகை நிதியை சபைக்குரிய வருமானம் ஈட்டக் கூடிய திட்டங்களில், சொத்துக்களை அபிவிருத்தி செய்தல் அல்லது பெரும்பான்மையான மக்களுக்கு பொது வசதிகளை வழங்கக் கூடிய செயற் திட்டங்களில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் ரூபா 167,567,153 தொகையும் நடைமுறைக் கணக்கில் ரூபா 194,231,825 தொகையும் சுவீப் கணக்கில் ரூபா 5,281,212 தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அடுத்த பொதுச் சபை அங்கீகாரத்தின் பேரில் சபை நிதியத்தின் மூலம் பொருத்தமான திட்டங்களை மேற்கொள்வதற்கு பயன்படுத்துவதாக. | மிகை பணத்தை சுற்றறிக்கை பிரகாரம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | 2023 சனவரி 07 ஆந் திகதி JCB இயந்திரத்திற்கு இடம்பெற்ற விபத்து தொடர்பாக நி.பி 104(4) பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பானவர்களை இனங்கண்டு நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப அறிக்கை உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பியுள்ளதாகவும் நி.பி. 104(4) இறுதி பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை யென்பதாகவும். | நட்டத்தை அறவிட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 581,643 ஆன நிலுவை ஓய்வூதிய பங்களிப்பு நிதிய மீதி தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | குறித்த பங்களிப்பு தொகை தீர்வு செய்யப்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு பயன்படுத்தும் 67 மயான காணிகளின் உரித்து மற்றும் 02 வாகனங்களினதும் உரித்து கையேற்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கைஏற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | .சபைக்கு சொந்தமான ஆதனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 14 பதவிகளில் 30 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 13 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு அரசின் கொள்கை அடிப்படையில் மேற்கொள்வதாகவும் நிறுவனம் சாராத பதவிகள் தொடர்பான தீர்மானங்கள் எடுத்தல் உரிய நிறவனங்களால் மேற்கொள்வதாகவும். | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும தகவல்கள் கண்டுபிடிக்க முடியாத உத்தியோகத்தர் 13 பேர்களிடமிருந்து ரூபா 426,955 கூட்டுத்தொகையான ஊழியர் கடன்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை.<br>தகவல்கள் கண்டுபிடிக்க முடியாமை. | கடிதங்கள் அனுப்பிய போதும் பதில் கிடைக்கைாமை, அடையானம் காண்பதில் தாமதங்கள் மற்றும் ஊழியர் பிணைத்தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும்1 |